**21.01.2025**

**O.S.No.143/2018**

**வா.சா.2 : வேலு**

<u>**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>**:-**

1) மேற்படி வழக்கில் நான் 3ம் தரப்பினர். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும். வழக்கு சொத்து ஆரம்ப காலத்தில் ராமசாமி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ராமசாமிக்கு 4 வாரிசுகள், அவர்கள் சரஸ்வதியம்மாள், ஜீவ ரேகா, சங்கர் மற்றும் மோகன். ராமசாமி எந்த வருடம் இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது.

2) ராமசாமி இறந்த பின்னிட்டு அவரது வாரிசுகள் வாய்மொழியாக பாக பிரித்துக்கொண்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. சரஸ்வதி மற்றும் சங்கர் சொல்லி தெரியும். 21.06.2016ல் சங்கர் இறந்தார். சங்கரின் வாரிசு லீலாவதி, ரவிந்திரன் மற்றும் கண்ணன். இந்த வழக்கில் லீலாவதி மற்றும் கண்ணன் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

3) வழக்கு சொத்து சம்பந்தமாக ஒரு விடுதலை பத்திரம் உள்ளதாக சொல்லியுள்ளேன். அது யார் யாருக்கு எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரஸ்வதியம்மாளுக்கு மோகன், ஜீவரேகாவும் எழுதிக்கொடுத்துள்ளார்கள். அது வாய்மொழி விடுதலை. எழுத்த மூலமான ஆவணம் எதுவும் இல்லை. ராமசாமியின் மகன் சங்கர்

இறந்தபின்னிட்டு சங்கரின் வாரிசுகள் பாகம் பிரித்துக்கொண்ட விவரம் நேரடியாக தெரியாது. ரவிந்திரன் சொல்லி தெரியும்.

4) சொத்து சம்பந்தமாக ஒரு கிரைய ஒப்பந்தப்பத்திரம் உள்ளதாக சொல்லியுள்ளேன். அது யார் யாருக்கு எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரஸ்வதியம்மாள் பழனிவேலுக்கு எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை. அந்த பத்திரத்தில் ரவிந்திரன் மற்றும் இதர வாரிசுகள் போட்டுள்ளார்களா என்றால் அவர்கள் கையெழுத்து எதுவும் போடவில்லை.

5) மேற்படி கிரைய ஒப்பந்தபத்திரம் எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டது போன்ற விவரங்களை நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியப்படி சரஸ்வதி புரோ நோட்டில் கையெழுத்து போட்டு கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. சங்கர் கையெழுத்து போட்டுக்கொடுத்த கடன் உறுதி சீட்டில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை.

6) பழனிவேலுக்கு எழுதிக்கொடுத்த கடன் உறுதி சீட்டில் சங்கர் எழுதிக்கொடுத்தது தெரியாது. துர்காவும், ரவிந்திரனும் எழுதிக்கொடுத்தது தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியவாறு 24.03.2017ல் வாதிகள் பணத்தை திரும்ப செலுத்திய போது நான் உடன் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த தேதியில் எந் பணமும் கொடுக்கப்படவில்லை என்றும், அந்த எந்த தேதியில் எந்த ஒப்பந்தத்தையும் ரத்து செய்து தருவதாக உறுதி கூறப்படவில்லை என்றால் சரியல்ல.

7) எனக்கு வழக்கு பிரதிவாதி பழனிவேல் யார் என்று தெரியாது என்றும் மேற்படி வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. பழனிவேல் எனது சொந்தகாரர், ஒரே இனத்தை சார்ந்தவர். நான் எனது வாக்குமூலத்தில் பொய்யான சாட்சியம் அளித்துள்ளதால் அவை ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/-S.Ganesan**
**Subordinate Judge, Attur.**